# தமிழ் அறிவு(வினா விடை) மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் போட்டி

விதிமுறைகளும் வழிகாட்டல்களும்

# Quiz & Verbal Communication Competition

Rules and Guidelines

## 2026

**“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”**

**வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்**

**Wentworthville Tamil Study Centre**

**www.wtsc.org.au**

# தமிழ் அறிவு (வினா விடை) மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் போட்டி - விதிமுறைகளும் வழிகாட்டல்களும்

## அறிமுகம்

மாணவர்களின் தமிழறிவையும் வாய்மொழித் தொடர்பாடல் திறனையும் மேம்படுத்தும் நோக்கில், இவ்வாண்டிலிருந்து தமிழ் அறிவு (வினா-விடை) மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் போட்டிகள் இணைந்து நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தவணை மதிப்பீட்டிலும் வாசிப்பு, எழுத்து மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் ஆகியவை முக்கியமான மூன்று பகுதிகளாக மதிப்பிடப்படுவதால், இப்போட்டியில் தமிழ் அறிவு போட்டிக்கு அதிக முக்கியத்துவம் (75%) வழங்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள், மாணவர்களின் வகுப்புத் தரத்திற்கேற்ப இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

## 1. பிரிவு 1 : ஆரம்பப்பள்ளி முதல் ஆண்டு 4 வரை, RoSA (ஆண்டு 4-6 நாவலர், ஆண்டு 7-9 விபுலானந்தர், ஆண்டு 10 பரணர்) மற்றும் இணைப்பு வகுப்புகள்

### 1.1 போட்டியின் பிரதான பகுதிகளின் பங்களிப்பு

போட்டியின் பிரதான பகுதிகளின் பங்களிப்பு கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரையறுக்கப்படும் .

| பிரதான பகுதி | உப பகுதி | பங்களிப்பு விகிதம் (%) |
|---|---|---|
| வாய்மொழித் தொடர்பாடல் | ◆ மாணவர் சுயவிபரங்கள்<br>◆ வீட்டில் நாளாந்தம் பேசும் விடயங்கள்<br>◆ விருப்பமான உணவு வகைகள்<br>◆ தமிழ் பண்டிகைகள் | 25 |
| தமிழ் அறிவு | ◆ வகுப்புக்களில் அல்லது பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்<br>◆ படங்களிற்கான பெயர் சொல்லுதல்<br>◆ தமிழ் பொது அறிவு | 75 |

## 1.2 போட்டிக்கான வினாக்கள்

- வாய்மொழித் தொடர்பாடல் பகுதியில் மாணவர்களின் தமிழில் உரையாடும் (பேச்சுத் தமிழ்) திறனை மதிப்பிடுவதற்கான பொதுவான வினாக்கள் கேட்கப்படும்.
- மாணவர்கள் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான பதிலைக் கூற வேண்டும்.
- மாணவர்களின் தமிழ்ச் சொற் பயன்பாடு, தமிழ் மொழியை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறன், மற்றும் கூச்சமின்றிப் பேசும் தன்மை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்.
- தமிழ் அறிவை மதிப்பிடுவதற்கான வினா விடைப் பகுதியில், பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள், படங்களுக்கான பெயர் சொல்லுதல் மற்றும் தமிழ் பொது அறிவு தொடர்பான 15 வினாக்கள் கேட்கப்படும்.
- ஒவ்வொரு வினாக்களுக்கும் அதிகபட்சமாக 30 வினாடிகள் மாத்திரம் வழங்கப்படும்.
- கேள்விகளுக்கான பதில்கள் தமிழில் இருக்க வேண்டும். ஆங்கிலக் கலப்பு இருந்தால் புள்ளிகள் குறைக்கப்படும்.

## 1.3 போட்டி விதிமுறைகள்

- போட்டிகள் வகுப்பு ரீதியாக நடைபெறும்.
- ஒவ்வொரு வகுப்புகளுக்கான மாதிரி வினாக்கள் முன்கூட்டியே வழங்கப்படும்.
- மாதிரி வினாக்கள் uEducateUs மூலமாகவும் பகிரப்படும்.
- ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயங்கள் சார்ந்த வினாக்கள் கேட்கப்படும்.
- பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்கும் முன்னர் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும்.

## 1.4 போட்டியின் சுற்று விபரம்

- இப்பிரிவுக்கான போட்டி ஒரேயொரு சுற்றாக மட்டும் நடைபெறும்.

## 1.5 பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறைகள்

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் உயர் புள்ளி 100% ஆகக் கணக்கிட்டு, அதனை அடிப்படையாகக் கொண்டு மற்ற மாணவர்களின் புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு தரப்படுத்தப்படும். போட்டியின் பெறுபேறுகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவு என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு, பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் பெற்ற புள்ளிகளுக்கேற்ப சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## 1.6 போட்டிகளுக்கான மதிப்பீடு

இப் போட்டிகளுக்கான மதிப்பீட்டுப் புள்ளிகள் கணிக்கும் முறை மற்றும் மதிப்பீட்டு இடங்களும், சான்றிதழ்களும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரையறுக்கப்படும்.

| மதிப்பீட்டுப் புள்ளிகள் | பிரிவு/சான்றிதழ் |
|---|---|
| 90 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள்<br>(குறைந்தபட்சம் முதல் 20% மாணவர்கள்) | முதலாம் பிரிவு |
| 80 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் - 90 புள்ளிகளுக்குக் கீழ்<br>(குறைந்தபட்சம் முதல் 40% மாணவர்களுள் இருக்க வேண்டும்) | இரண்டாம் பிரிவு |
| 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் - 80 புள்ளிகளுக்குக் கீழ்<br>(குறைந்தபட்சம் முதல் 60% மாணவர்களுள் இருக்க வேண்டும்) | மூன்றாம் பிரிவு |
| 35 அல்லது 35 புள்ளிக்கு மேல் எடுத்த எஞ்சியுள்ள மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |
| 35 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள். | பங்குபற்றியமைக்கான சான்றிதழ் |

## 1.7 போட்டி முடிவுகள்

போட்டி முடிவுகள், போட்டி முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குள், uEducateUs மூலம் மாணவர்களின் பெற்றோருக்கு அனுப்பப்படும்..

## 2. பிரிவு 2 : ஆண்டு 5 முதல் 9 மற்றும் HSC ஆண்டு 10 முதல் 12

ஆண்டு 5 முதல் 9 வரை மற்றும் HSC ஆண்டு 10 முதல் 12 வரையிலான மாணவர்களுக்கான போட்டிகள் வகுப்பு அடிப்படையில் நடத்தப்படும். ஒவ்வொரு வகுப்பிற்கும் போட்டிகள் தனித்தனியாக நடைபெறும். ஒவ்வொரு வகுப்பிற்கும் மாதிரி வினாக்கள் முன்கூட்டியே வழங்கப்படும். மேலும், இந்த மாதிரி வினாக்கள் uEducateUs மூலமும் பகிரப்படும்.

### 2.1 போட்டியில் உள்ளடங்கும் பகுதிகள்

போட்டியின் பிரதான பகுதிகளும் அவற்றின் உப பகுதிகளும், அவற்றிற்கான பங்களிப்பு விகிதங்களும் வகுப்புகளுக்கேற்ப கீழே உள்ள அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்படும்.

| பிரதான பகுதி | உப பகுதி | வகுப்பு | பங்களிப்பு விகிதம் (%) |
|---|---|---|---|
| வாய்மொழித் தொடர்பாடல் | ◆ மாணவர் சுயவிபரங்கள்<br>◆ வீட்டில் நாளாந்தம் பேசும் விடயங்கள்<br>◆ விருப்பமான உணவு வகைகள்<br>◆ தமிழ் படிப்பதன் நோக்கம்<br>◆ தமிழ் பண்டிகைகள் | ஆண்டு 5 முதல் 9 வரை | 25 |
| | ◆ மாணவர்கள் அண்மையில் பார்த்த தமிழ் படங்கள் பற்றிய விமர்சனம்<br>◆ மாணவர்களைக் கவர்ந்த தமிழ் நிகழ்ச்சிகள் மற்றும் வேறு ஏதாவது சம்பவங்கள் பற்றிய விமர்சனம்<br>◆ ஆஸ்திரேலிய கலாசாரம் - கவர்ந்த விடயங்கள், சமூக பார்வை/நோக்கு<br>◆ பல்லின கலாசாரம்<br>◆ உலக போக்கும் தமிழ் வளர்ச்சியும்<br>◆ படம்/ஒளி/ஒலிப்பதிவு விமர்சனம் | HSC ஆண்டு 10 முதல் 12 | 25 |

| பிரதான பகுதி | உப பகுதி | வகுப்பு | பங்களிப்பு விகிதம் (%) |
|---|---|---|---|
| **தமிழ் அறிவு** | ◆ வகுப்புக்களில் அல்லது பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்<br>◆ தமிழ் சொற்களஞ்சியம்<br>◆ தமிழ் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு மற்றும் வரலாறு தொடர்பான அறிவு<br>◆ தமிழ் பொது அறிவு | ஆண்டு 5 முதல் 9 வரை மற்றும் HSC ஆண்டு 10 முதல் 12 | 75 |

## 2.2 போட்டியின் சுற்று விபரம்

- போட்டிகள் இரண்டு சுற்றுக்களாக நடைபெறும்.
- முதல் சுற்றில் வாய்மொழி தொடர்பாடல், மற்றும் தமிழ் அறிவு போட்டிக்கான மதிப்பீடுகள் (**வினாக்கள்**) இடம்பெறும்.
- இரண்டாம் சுற்றில் (இறுதி சுற்றில்) தமிழ் அறிவு போட்டிக்கான மதிப்பீடுகள் (வினாக்கள்) மட்டும் இடம்பெறும்.
- முதலாம் சுற்றிலிருந்து இரண்டாம் சுற்றிற்கு 8 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். ஒரே ஆண்டிலுள்ள அனைத்து வகுப்புகளிலிருந்தும் அதிகபட்ச புள்ளிகளைப் பெற்ற முதல் 8 மாணவர்கள் இரண்டாம் (இறுதி) சுற்றிற்கு தேரிவு செய்யப்படுவர்.

## 2.3 போட்டி விதிமுறைகள்

### 2.3.1 முதல் சுற்றுப் போட்டி

- முதல் சுற்றின் வாய்மொழித் தொடர்பாடல் பகுதியில், மாணவர்களின் தமிழில் உரையாடும் (பேச்சுத் தமிழ்) திறனை மதிப்பிடுவதற்கான பொதுவான வினாக்கள் கேட்கப்படும் (பகுதி 2.1 இல் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு).
- மாணவர்கள் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான பதில்களை கூற வேண்டும்.

- மாணவர்களின் தமிழ்ச் சொற் பயன்பாடு, தமிழ் மொழியை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறன், மற்றும் கூச்சமின்றிப் பேசும் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்.
- கேள்விகளுக்கான பதில்கள் தமிழில் இருக்க வேண்டும். ஆங்கிலக் கலப்பு இருந்தால் புள்ளிகள் குறைக்கப்படும்.
- முதல் சுற்றின் தமிழ் அறிவு பகுதியில், தமிழ் அறிவு தொடர்பான வினாக்களைக் கொண்ட வினாத்தாள் வழங்கப்படும். மொத்தம் 15 வினாக்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வினாக்களிற்கும் அதிகபட்சம் 30 வினாடிகள் மாத்திரமே வழங்கப்படும். மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் (7 நிமிடம் 30 வினாடி) அவற்றிற்கு எழுத்து மூலம் பதிலளிக்க வேண்டும்.
- **வினாத்தாள் அமைப்பு :** 30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் (பகுதி 2.1 இல் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு).
- குறிப்பாக, இவ்வாண்டு தமிழ் அறிவுப் போட்டியில் சொற்களஞ்சியத்திற்கான மதிப்பீடும் இடம்பெறும் (பகுதி 2.1 இல் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு).

### 2.3.2 இரண்டாம் சுற்றுப் போட்டி ( இறுதிச்சுற்றுப் போட்டி)

- இரண்டாம் சுற்று (இறுதிச்சுற்று) போட்டிகள் தனியாக ஒரு வகுப்பறையில்/மண்டபத்தில் நடைபெறும்.
- இச்சுற்று தமிழ் அறிவு வினா-விடைப் போட்டியாக மட்டுமே இடம்பெறும்.
- இச்சுற்றில் பங்குபற்றும் மாணவர்களுக்கு iPad வழங்கப்பட்டு, மணி (Buzzer) அழுத்துவதன் மூலம் விடைகளைத் கூறும் வாய்ப்பு வழங்கப்படும்.
- இரண்டாம் சுற்றில், தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் முதலில் தலா ஒரு பல்தேர்வு வினா தனித்தனியாக கேட்கப்படும்.

- ❖ மாணவர்களுக்கு வினா திரையில் காண்பிக்கப்பட்டு வாசித்துக் காட்டப்படும். அவர்கள் வழங்கப்பட்ட மூன்று அல்லது நான்கு விடைகளில் சரியானதை குறித்த நேரத்திற்குள் தெரிவுசெய்து கூற வேண்டும்.
- ❖ ஒரு மாணவர் அந்த வினாவிற்கு பதிலளிக்க தவறினாலோ அல்லது தவறாக பதிலளித்தாலோ, அந்த வினா அடுத்த போட்டியாளருக்கு வழங்கப்படாது.
- ❖ சரியாக பதிலளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். தவறாக பதிலளித்தால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது.
- ❖ இதனைத் தொடர்ந்து, அனைத்து மாணவர்களும் விடையளிக்கும் வாய்ப்பு பெறும் வகையில் பொதுவாக வினாக்கள் கேட்கப்படும். மணியை அழுத்துவதன் மூலம் விடைகளைக் கூறுவதற்கான முன்னுரிமை வழங்கப்படும்.
- ❖ கேள்விகள் வாசித்து முடிந்ததும் முதலில் மணியை அழுத்துபவருக்கு முதல் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
- ❖ சரியாக பதிலளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். தவறாக பதிலளித்தால் 2 புள்ளிகள் கழிக்கப்படும்.
- ❖ முதல் மாணவர் தவறாக பதிலளித்தால், அடுத்ததாக மணியை அழுத்திய மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சரியாக பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும்; தவறாக பதிலளித்தால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது.
- ❖ ஒரு மாணவருக்கு, ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு முறை மட்டுமே பதிலளிக்கும் வாய்ப்பு வழங்கப்படும்.
- ❖ **வினா அமைப்பு**: மொத்தம் 15 வினாக்கள் கேட்கப்படும். இதில், 30% வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும், 70% வினாக்கள் பகுதி 2.1 இல் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உப பகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
- ❖ வினாக்கள் பல் தேர்வு வினாவாக இருந்தால், வழங்கப்பட்ட மூன்று அல்லது நான்கு விடைகளில் சரியானதை தெரிவு செய்து கூற வேண்டும்.
- ❖ சில வினாக்களிற்கு விடைகள் வழங்கப்படமாட்டாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மாணவர்கள் சரியான பதிலைத் தாங்களே கூற வேண்டும்.
- ❖ ஒவ்வொரு வினாவிற்கும் அதிகபட்சம் 30 வினாடிகள் வழங்கப்படும்.

## 2.4 போட்டி முடிவுகள்

இறுதிச் சுற்றுக்கு தெரிவான மாணவர்கள் விபரம் முதல் சுற்று முடிவடைந்து இரண்டு நாட்களுக்குள் uEducateUs மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கு அனுப்பப்படும்.

இறுதிச் சுற்று முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குள் போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களினதும் இறுதி முடிவுகள் uEducateUs மூலம் மாணவர்களின் பெற்றோருக்கு அனுப்பப்படும்.

## 2.5 பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறைகள்

இப்போட்டியின் இறுதிச் சுற்றின் பெறுபேறுகள், மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு அதற்கேற்ப, பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இப்போட்டிகளுக்கான மதிப்பீட்டு – முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் இடங்கள் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரையறுக்கப்படும்.

| மதிப்பீட்டுப் புள்ளிகள் | இடம் |
|---|---|
| அதியுயர் புள்ளி | முதலாம் இடம் |
| இரண்டாவது உயர் புள்ளி | இரண்டாம் இடம் |
| மூன்றாவது உயர் புள்ளி | மூன்றாம் இடம் |

இறுதி சுற்றிற்கு தெரிவான மற்றைய மாணவர்களுக்கு இறுதி சுற்றுப் போட்டியாளர் சான்றிதழ் வழங்கப்படும். போட்டியில் பங்குபற்றி இறுதி சுற்றுக்கு தெரிவாகாத மாணவர்களுக்கு போட்டியில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.